Registered as a News Paper in Ceylon
P. M G. No. H. A. 59/300 of 1953.

# இந்து சாதனம்

விரோதி ௵ (1889) ஆவணி ௴ 28௨ ஆரம்பமானது

வெள்ளி தோறும் வெளி வருவது

தனிப்பிரதி: சதம் 10.

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசு தென்றலும் வீங்கிள வேனிலும், மூசுவண்டறை பொய்கையும் போன்றதே, ஈசனெந்தை யிணையடி நீழலே.

[புத் - கூஎ] யாழ்ப்பாணம்:- மன்மத௵ புரட்டாதி ௴ உஅ௨ வெள்ளிக்கிழமை (14 OCT. 1955) [இல- அ]

அாசியல் வகை:

## கதை கட்டிக் காரியம் பார்க்கும் கட்சி

### வடக்கு ஒருவிதம் கிழக்கு மறுவிதம் ஆக்கச் சூழ்ச்சியா?

கொடுங்கோலாட்சி புரிந்த கிட்டிலரும் சர்வாதிகார முசோலினி சிற்றலின் முதலியவர்களும் கையாண்டு வந்த ஒரு சூழ்ச்சி, கதைகட்டல் என்னும் அரச தந்திர சம்பிரதாயம். இந்தக் கதை கட்டும் வேலைக்கு மிகத் தேர்ந்த சாதுரியவான்கள் நியமிக்கப்படுவார்கள். அவர்கள் மெய்யைப் பொய்யாக்கி பொய்யை மெய்யாக்கி எல்லாவற்றையும் பொய்யாக்குவார்கள் ஆனல் இரண்டு மகாயுத்தங்களிலும் அந்தக் கதை கட்டும் சூழ்ச்சி வினையாக மாறி விதியாய் விளைந்து அதை நினைத்தவர்களுக்கே பெருங் கேடு விளைவித்தது என்பது இந்த நூற்றாண்டு நிகழ்ச்சிகளில் ஒன்று.

மொழிகள்பற்றி மூடமந் திரங்கள் மாத்திரம் இருந்து வருகின்றன என்று பலரும் கவலைப்பட்டார்கள் ஆனல் அந்தரங்கமான சூழ்ச்சிகளும் நடைபெறுகின்றன. கட்டுக் கதைகளும் இயற்றப்படுகின்றன. அரசியற் சூறாவளியிலே காற்றடி விடச் சிலர் துணிந்து விட்டார்கள். இதன் பயனாகத் தமிழினத்தைப்பிரித்து வைப்பதற்குப்பகிரங்கமான

தொடர்ச்சி 5-ம் பக்கம்

## மனத்தொடு வாய்மை மொழிந்த மன்னன் அரிச்சந்திரன்

—————0—————

### தவத்தொடு தானஞ் செய்தாரிலும் தலைசிறந்து விளங்கினன்

—————0—————

[1]

காரைநகர், திரு. வே. பொன்னம்பலம்

ஆரஞர் மூழ்கியும் ஆக்கமிழந்தும் வாரிசுருங்கியும் வாய்மை நிறுத்தித் தாரணியாண்ட அரிச்சந்திரனது சிறந்த சரித்திரத்தைச் செந்தமிழ் விருத்தப் பாவாற் புராணமாகப் பாடியவர் ஆசுகவிராயர். இது 1215 செய்யுட்களையுடையதாய்ப் பன்னிரண்டு காண்டங்களைக் கொண்டது. இதுசொன்னயமும் பொருணயமும் வாய்ந்ததாய்ப் படிப்போர் உளத்தைக் கவரும் இயல்பினது. இக்காலச் சீவியத்தையொட்டிச் சிலர் அரிச்சந்திரன் என்ற ஒருவன் வாழ்ந்திருப்பானேஎன்று எண்ணுகின்றனர். அவர்களுக்கு யான் ஒன்று சொல்லுவேன். அரிச்சந்திரன் என்று ஒருவன் வாழாவிட்டாலும் இவ்வாறு ஒருவன் வாழ்ந்தானென்று வைத்துக் கொண்டு புராணத்தை யாத்த ஆசுகவியின் நிலைதான் என்னே! அவர் உள்ளத்தில் இவ்வாறான ஒரு ஒழுகலாறு தோன்றியதுதானே. அவரும் ஒரு மனிதன் தானே. அவ்வாறாக ஏன் இன்னெருவன் மனதில அவ்வொழுக்காறு தோன்றக்கூடாது........? அதன் வழி ஏன் ஒழுகக்கூடாது....? ஆகவே, அரிச்சந்திரன் வாழ்ந்தான், வாழுகின்றான், வாழ்வான்என்பது உண்மை.

கிர்த பூர்வத்தில் சிறத்தொண்டனுக அவதரித்து வாழ்ந்து வருங் காலத்துச் சிவன்சோதனையாற்செய்த சிவதர்மத்தைச் சொன்ன காரணத்தானே அரிச்சந்திரனுக அவதரித்தான் என்பது கதை. நிற்க, மகாத்மா காந்தி அகிம்சா தர்மத்தை நிலைநாட்டியது அன்னை கஸ்தூரிபாயால் என்பது யாவரும் அறிந்த உண்மை. அதேபோன்று அரிச்சந்திரனை உண்மை வாழ்விலே புகுத்திய பெருமை சந்திரமதிக்கே உண்டு. ஆகவே அரிச்சந்திர புராணத்தைப் படிக்கும் மக்கள் உள்ளத்திலே பதிந்து முதலிடத்தைப் பெறுபவள் சந்திரமதியே. இவள் அரச குடும்பத்திலே வளர்ந்து அரசபோகத்தை அநுபவித்தாள். என்றாலும் முன் செய்த வினையாலும் விசுவாமித்திரன் சூழ்வினையாலும் பிராமணனுக்கு அடிமைப்பட்டாள். "கடமையைச் செய்ய உரிமை தானே வரும்',. என்னும் இலக்கியத்துக்கேற்ப வாழ்ந்தவள் சந்திரமதி. எவ்வாறெனில்

"கைபினி லுலக்கை பற்றிக்
காந்தளினுதிரம் பாய
மெய்யினில் வியர்நீர்சிந்த
விழியினிலருவி பாய
செய்யினின் முடித்த கூந்தல்
செற் குத்துங் கொடுமை
காணு
மையினிற் றிகழ்வேற்கண்ணு
ரம்பையர் மறுகிச் சோர்ந்
தார்"

தொடர்ச்சி 6 ம் பக்கம்

## சைவத்திற்கு உயிரூட்டும் பணி வேண்டும்

### சுவர்க்கத்தை இப் பூவுலகில் நாம் காணவேண்டும்

#### அனலைதீவில் குன்றக்குடி அடிகளாரின் உணர்ச்சியுரைகள்


அனலைதீவு ஆங்கில பாடசாலையில் தமக்கு அளிக்கப்பட்ட வரவேற்பில் குன்றக்குடி அடிகளார் பேசும் போது, "இந்த நாட்டிலே பௌத்த மதத்தைப் பரப்ப ஆயிரக் கணக்கான பிக்குகளிருப்பதாகக் கேள்விப் பட்டேன், உலகெங்கும் கிறிஸ்தவமதத்தைப் பரப்ப ஆயிரக் கணக்கான குருமார்கள் இருக்கிறார்கள். ஆனல் சைவத்தைப் பரப்ப அகன் பரந்த பண்பட்ட நெறியை எடுத்துரைக்க நம் நாட்டில் ஒரு சைவப் பாதிரிகூடக் கிடையாது".

"சைவத்தின் நிலை இப்பொழுதுதளர்ச்சியடைந்து வருவது கண்டு நாம் மிகவும் கவலையடைய வேண்டியவர்களாயிருக்கின்றோம். சைவத்துக்கு உயிரோட்டம் அவசியமாகின்றது. எதிர் காலத்தில் சைவம் தலைதூக்கி நிற்க வேண்டுமானல் சைவத்திற்கு உயிரூட்டும் பணியில் இளைஞர்கள் ஈடுபடவேண்டும்.

அனலைதீவு மக்கள் சைவத்தின்மீது அசைக்க முடியாத பற்றுடையவர்களென்பதை அறிய நான் மிக்க மகிழ்ச்சியடைகின்றேன். மற்ற மதத்தினர் ஒருவர்கூட இத் தீவில் இல்லையென்பதைக் கேட்டு நான் மிக்க ஆச்சரியமடைகின்றேன். அகில உலகுக்கும் இச் சிறு தீவு வழி காட்டுகின்றது என்பதை மிகக மகிழ்வுடன் கூறுகின்றேன். சைவத்தைநாடெங்கும் பரபபி அறிவொளி பரப்ப நல்ல தொண்டர் அவசியம் வேண்டும். சைவத்தைப் பரப்ப நாடெங்கும ஆயிரக் கணக்கான சைவப் போதகர்கள் தோன்றவேண்டும். அத்தகைய தொண்டர்களை இந்த நாடு ஆக்கித் தருமென நான் கருதுகின்றேன்.

ஆங்கில சாம்ராச்சியத்தை இழந்தாலும் ஷேக்ஸ்பியரை ஒருபொழுதும இழக்கமாட்டோமென்று ஒரு ஆங்கில அறிஞன் கூறினனும். அவன் தன் நாட்டிலும் பார்க்கத் தன கவிஞன் மீது — அவன் இலட்சியத்தின்மீது அளவிறந்த பற்றுக்கொண்டிருந்தானென்பதை நாமறியமுடிகிறது. ஆனல் நாம் நமது வாழ்வைப் பெரிதாக மதிக்கின்றோமே தவிர நமது மதத்தை — சைவ நெறியைப்பெரிதாக மதிக்கிறோமேயில்லை. இந்த நிலை மாறவேண்டும். வானுலக வாழ்வை எதிர் பார்த்து ஏங்குவதை விடுத்து இப்பூவுலகிலேயே சொர்கத்தைக்காண நாம் முயல வேண்டும்.

சைவத்தின் சரித்திரத்தை எடுத்துக் காட்டுக்களாகக் காணுவதை விடுத்து நம் வாழ்வில் அதனை [illegible] வேண்டுமென்று உணர்ச்சிததும்பக் கூறினர்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனும் ஓங்குக
ஆழ்க தீயதெல்லாம் அரன் நாமமே
சூழ்க வையகமும் துயர் தீர்கவே
திருச்சிற்றம்பலம்


# இந்துசாதனம்

யாழ். மன்மத ஞு புரட்டாதிமீ உஅ வெள்ளிக்கிழமை


## கேட்டுக்கறிகுறியான கிளர்ச்சிகள்

மனித உள்ளம் மாறி விட்டதா? மறம் அறத்தைப் புறங்கண்டுவிட்டதா? அமைதி, ஆராய்வு, ஆதரவு என்ற நற்பண்பாட்டுக் குணங்கள் மறைந்து விட்டன. ஆரவாரம், அவதி ஆவேசம் ஆதியாம் தீய பழக்கங்கள் குடி புகுந்து விட்டன, இதுதான் இன்றைய நிலை, அரசியலிலும் சமூகவியலிலும் சமயவியலிலும்.

ஈழத்துக்கு அரச கரும மொழிகள் இரண்டு என்பதைச் செய்கைமுறையில் அமைப்பதற்கு அமைச்சவையும் பாராளுமன்றமும் முயன்று வரும் அமையத்தில், ஒருபெரும் அரசியற் கொந்தளிப்பை உண்டாக்கி நாட்டைத் அண்டாக்கி மக்கள் மத்தியிலே மலைவையும் வன்மையையும் நிலைநாட்டிவிடச் சில துரோகிகள் துயிலாது உண்ணாது உழைப்பதை நோக்குமிடத்து, பழம் பெருமை வாய்ந்த இலங்கையிலுமா இவ்வாறு இயற்கைக்கு முரண்பாடான தீமை விளைகின்றது என்று நாம், அம்ம, அலமருகின்றோம்.

அரிசி விலையைக் குறைத்துவிடுங்கள் என்று கேட்பதற்கும் பலாத்கார ஆர்ப்பரிப்பு வேண்டும். ஐந்து ஆறு ஆட்கள் அரிய உயிரை அவமே இழத்தல் வேண்டும் என்ற வகையிலே பயின்று வருகின்றவர்கள் மொழிகள்பற்றி எழுந்திருக்கும் வாதத்திலும் பழி பாதகத்துக்கஞ் சாது பயங்கரமான செயல்களைச்செய்து தங்கள் காரியம் பார்ப்பதற்கு முயற்சிக்கின்றார்கள் என்பது யாவரும் அறிவர். கொழும்புமாநகரிலே நடந்த ஒரு பொதுவுடைமைக் கூட்டத்திலே புத்த குருமார்கள் அடிதடி அபாயத்துக்குள்ளாகப்பட்டனர் என்பதை அறிந்து மனம் வருந்துகின்றோம்.

வாதங்கள் எழுவது புதிதல்ல. ஆனால் அவற்றைக் கேடான வழியிலே நிகழ்த்தி வீண் கிளர்ச்சி செய்வதுதான் புதுமையாகின்றது. இந் நாட்டிற்கு எம்

# நவராத்திரி

## யோகமோட்சங்கள் பெறும்சாதனை

### புரட்டாதி 30 ஞாயிற்றுக்கிழமை (16-10-55)

நவராத்திரி என்பது புரட்டாதி மாசத்தில் வரும் அமாவாசைக்கு அடுத்த நாளில் வரும் பிரதமை திதி தொடக்கம் நவமி வரையுமுள்ள ஒன்பது நாட்களில் இராக்காலத்திற் செய்யப் பெறும் சக்தி வழிபாட்டைக் குறிக்கும்.

இந்நாட்களில் உமை, இலக்குமி சரசுவதி ஆகிய மூன்று சக்திகளுக்கும் மூன்று கும்பம் வைத்துப் பூசைசெய்யப்படும். உமாதேவியாருடைய கும்பத்திலே துர்க்கை அல்லது மகாகாளிக்குப் பூசை செய்வர். ஒன்பதாம் நாளாகிய மகாநவமியில் மூன்று சக்திகளுக்கும் விசேட பூசை செய்யப்பெற்று, பத்தாம் நாள் மானம்பு நிகழும்.

சக்தியின்றிச் சிவம் இல்லை. சக்தி என்பது சிவத்தின் அருள் அல்லது ஆற்றல் ஆகும் ஐந்தொழிலும் சக்தியாலேயே நிகழ்தலின் நாம் பெறவேண்டிய பேறுகளெல்லாவற்றுக்கும் சக்தி வழிபாடே சிறந்ததென்பர். நிலத்தைப் பண்படுத்திப் பயிர் நட்டு விளைவைப் பெறுவதுபோல் அஞ்ஞானத்துக்கு ஏதுவாகிய ஆணவத்தைச சிறிது சிறிதாய் உலக போகங்களால் நீக்கி நீக்கி, அருள் என்னும் பயிரை வளர்த்து அருள் நிறைவாகிய விளைவை முச்சத்திகளும் தரும். பத்தாம் நாளாகிய விஜயதசமியிலே மகிடாசுரன் கொல்லப்படுதல் ஆணவமல நீக்கத்தைக் குறிக்கும். ஆணவம் நீங்குதலும் பேரின்பப் பெருவாழ்வு சித்திக்கும்.

எனவே, இந்நவராத்திரியில் சக்தியை வழிபட்டு உயிர் வாழ்க்கையில் வேண்டியவற்றைப் பெற்று அவற்றின் பேறாகிய பேரின்பத்தைப் பெறுதற்கு நாம் முயலுதல் முறையாகும் என்று அறிஞர் அறிவுரை கூறுவர்.

## மது ஒழிப்பும் மாணவர் மனமும்!

மது ஒழிப்புப்பற்றி சர்வகலாசாலை மாணவருக்கு ஸ்ரீ டட்லி சேனநாயக கொழும்பிலே பேசினாராம். தமது பேச்சில் அமெரிக்காவில் மதுஒழிப்புச் சித்தி யெய்தாதபடியால் இலங்கையிலும் சித்தி எய்த மாட்டாது என்பது சரி அல்ல என்றும், இந்தியாவில் அது சித்திபெற்றுப் பரவுகின்றது என்றும் எடுத்துக் காட்டி அங்கே சித்தி பெறவில்லை என்பது சரி அல்ல என்றும் சொன்னாராம். அத்தகைய அறிவுரைகளை அங்கேயிருந்த சர்வகலாசாலை மாணவர் இழிமொழிகள் கூறி ஏளனம் செய்தனராம்!

மொழிகள் அரச வரிசை பெறுதலவேண்டும் என்று அமைதியாய் இருந்து அறிவு கொண்டாய்ந்து முடிபு செய்வதற்கு மக்களுக்கு முடியாதென்றால் அவர்களுக்கு மொழி எதுவானாலென்ன? பொய்யைப் புகுத்தி போலி நியாயம் வருவித்துப் புரட்சிக்கிடமான கிளர்ச்சியை உண்டாக்கி நாட்டுக்குக் கேட்டை விளைவிப்பதற்கு மானம் வெட்கமின்றி நடமாடும் அனைவரையும் நல்வழியிற் கொணர்ந்து செம்மையாக்குவதற்குத் தேசத்தொண்டர்கள் முன்வருதல் வேண்டும்.

## அருள்நெறித் திருக்கூட்ட அங்குரார்ப்பணம்

இலங்கை அருள்நெறித் திருக்கூட்டமொன்று சென்ற ஞாயிற்றுக்கிழமை திருப்பெருந்திரு குன்றக்குடி அடிகளார் தலைமையில் பூண்டலோயாவில் நடந்த கூட்டத்தில் அங்குரார்ப்பணம் செய்யப் பெற்றதாம்.

அதன் போஷகர் அடிகளார் அவர்கள் தலைவர் திரு. க. இராமச்சந்திரன், உப தலைவர்கள் வடிவேல் சுவாமி, முதலான ஆறு பேர் பொதுச் செயலாளர்கள் திருவாளர்கள் நா. முத்தையா, சி. க. வேலாயுத பிள்ளை தனாதிகாரி திரு. க. குமாரவேல்.

இக்கூட்டத்தின் சார்பில் ஒரு மடமும் ஆரம்பிக்கப் படுமாம்.

## ஒருமொழிக்காக உண்ணாவிரதம்

சிங்களம் ஒன்றுமே அரசாங்க மொழியாக்கப்பட வேண்டுமென்றும் அப்படிச் செய்யாவிட்டால் தாங்கள் சாகும்வரை உண்ணாவிரதம் அனுட்டிப்பதாகவும் அநுராதபுரத்தில் நடந்த கூட்டமொன்றில் சில சிங்கள ஆயுர்வேத வைத்தியர்கள் தீர்மானித்தனராம்.

## வாழ்க்கை வானில்

— வளர்மதி

### ஒரு மொழிக்காக உண்ணாவிரதமா!

● மொழிகள் விவாதப் மும்முரமாய் எழுந்து விட்டது! மூலையில் முற்றத்தில் கேலை நிலையத்தில் விளையாட்டு மைதானத்தில் எங்கும் மொழிகள் எவை? என்பதே பேச்சு. பேச்சோடு நின்று விட்டாற் பிழையில்லை எச்சும் இன்னும் சில நாழிகை கழிந்துபோக எறியும் இரத்தக் காயமும் ஆக வளர்ந்துவிடும் போலிருக்கிறது.

அநுராதபுர ஆயுர்வேத சங்கத்தினர் ஒரு அபூர்வமான வழி கண்டுவிட்டார்கள் ஒருமொழியில்லாது விட்டால் உண்ணாவிரதம் என்று ஒருமொழியாம் உறுதி கூறிவிட்டார்கள் காயகற்பம் முதலிய சிரஞ்சீவி மருந்துகள் செய்து பயிற்சிபெற்றிருக்கும் வைத்தியர்கள் உண்ணாது விட்டாலும் உயிர் போகாதே!

### கதிரைமலைக் கந்தனுக்கு விண்ணப்பமா!

● வேறு ஒரு குழுவினர் ஒருமொழி வேண்டி அந்தத் தமிழ் மொழித் தாதா ஆகிய கந்தவேளைக் கதிரைமலையிலே பூசிக்கின்றார்களாம்: வைதாரையும் வாழவைக்கும் மாணிக்க கங்கை வளப்பு வாய்ந்த மலைச் சாரலிற் கோயில் கொண்டெழுந்தருளியிருக்கும் இளமுருகன் இந்த ஒருமொழிக் குழுவினரையும் தடுத்தாட் கொண்டு அருள்புரிவார் என்பதற்கையமின்று.

### 'ஒருமொழி' 'இருமொழிக்' கைகலப்பு

● கொழும்பு மாநகர மன்ற மண்டபத்தில் பொதுவுடைமையினர் இருமொழிக்கூட்டத்தில் ஒருமொழிக்காக உழைக்கும் புத்த குருமார்களும் உட்புகுந்தனர். சண்டையாரும்பம் எழுந்தது. அடிகள் தாண்டவமாடின. நாற்காலிகள் காற்றிற் பறந்தன. சொல்வீச்சுக் கல்வீச்சானது. செஞ்சட்டைக்காரரும் காவியணிந்த குருமார்களும் மொழிக்காகவா மோதுதல் வேண்டும். மதத்துக்காக என்றாலும் காரியமில்லையே.

### தாரைப் பூசி யாரை மடக்கலாம்!

● தமிழ் எழுத்துக்களைப் பெயர்ப் பலகைகளிலிருந்து தார் பூசி அழிக்கின்றார்களாம அது யார் செய்தாலும் செய்யலாம். ஆனால் தமிழ்மொழி அழிந்துவிடுமா? ஒருமொழிக் குழுவினருக்கு ஒன்றும் கொழுகொம்பில்லாது இப்பொழுது தார்தான் தஞ்சமாய் விட்டதுபோலும்! இவர்கள் தங்கள் முகத்திற் கரி பூசிக் கண்ணியமான உலகின் கவனத்தைத் தங்கள் பால் இழுக்க முயற்சிக்கின்றார்கள் என்றால் யார் தான் என் செய்யலாம்? பெயர்ப் பலகையிற் பல தார்க்கை முயன்றாலும் தமிழ் மொழி தமிழ் மொழியாகவேயிருக்கும்.

## கொழும்பில் குன்றக்குடி அடிகளார்

தவப்பெருந்திரு குன்றக்குடி அடிகளார் இன்று காலையில் கொழும்புக்குப் போகின்றாராம். வெள்ளி, சனி, ஞாயிறு ஆகிய மூன்று நாளிலும் இரத்மலானை வெள்ளவத்தை முதலியபல இடங்களில் வரவேற்புகள் சொற்பொழிவுகள் நடக்கும். அடிகளார் திங்கட்கிழமை இந்தியாவுக்குத் திரும்புகின்றார்.

## தமிழை ஒதுக்கும் மற்றொரு முறை

கொழும்பின் பல இடங்களிலுள்ள வீதிப் பெயர்ப் பலகைகளில் தமிழ்ப் பெயர் அழிக்கப்படுகின்றதாம். இவ்வாறு வேறு இடங்களிலும் நடப்பதாக அறியவருகின்றது.

## இந்தியா திரும்புவோர் தொகை

சென்ற பத்து மாசங்களில், 20430 பேர் இந்தியாவுக்குத் திரும்பிப் போயிருக்கின்றார்களாம்.

## அரியாலை சனசமூகநிலையம்

மேற்படி நிலையத்தின் நிர்வாகசபைக் கூட்டம் (9-10-55) ஞாயிற்றுக் கிழமை நிலையத் தலைவர் திரு. எஸ். சி. மகாதேவா (வழக்கறிஞர், எம். எம். சி) அவர்கள் தலைமையில் நிலையக் கட்டிடத்தில் கூட்டப்பட்டது. பொதுக்காரியதரிசியாகிய திரு. T. சோமசேகரம் அவர்கள் உத்தியோக மார்க்கமாக கொழும்புக்குச் சென்றதால் அவரது பதவி நீக்க அறிவித்தல் ஏற்றுக்கொள்ளப்பட்டது. அந்த இடத்தைப் பூர்த்தி செய்வதற்காக திரு. ப. ஐயாத்துரை (கொக்குவில் இந்துக்கல்லூரி ஆசிரியர்) அவர்கள் அரியாலை ஜனசமூக நிலையப் பொதுக்காரியதரிசியாக ஏகமனதாகத் தெரியப்பட்டார். கூட்டம் $12\frac{1}{2}$ மணியளவில் இனிது முடிவெய்தியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபை

## 1954—1955-ம் ஆண்டு அறிக்கை

ஞாயிற்றுக்கிழமை 2-10-55 ல் நிகழ்ந்த ஆண்டு நிறைவுக் கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பெற்றது

(முற்றொடர்)

6. கிறீஸ்தமத ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகளில் சைவ மாணவரை மதம் மாற்றும் விஷயம்பற்றிச் சபை ஆவன முயற்சித்து வருகிறது.

**புண்ணியநாச்சி தருமம் :**

1. மறவன்புலோவில் பிள்ளையார் கோவில் மண்டபம் பழுதடைந்த நிலையிலிருந்தது. இவ் வருடம் இம் மண்டபம் கொன்கிறீற் கற்களால் கட்டப்பட்டுள்ளது. கூரை வேலை விரைவிற் செய்யப்பட்டு மண்டபம்பூர்த்தியாவதற்கு ஆவன செய்யப்படுகின்றது.

2. ஆச்சிரம வகையால் ஏற்பட்டுள்ள மிகுதிக் கடனாகிய 1500 ரூபா இவ்வருடம தீர்க்கப்பட்டது.

3. சிதம்பரத்தில் சபையின் பேரால் நிகழும் கட்டளைகள வழக்கம்போல் நடைபெற்று வருகின்றன. அங்கேயுள்ள சபையின் மடக் கட்டடத்திற்குத் திருத்தங்கள் செய்யப்பட்டன. சிதம்பரம் கும்பாபிஷேகத்திற்குச் சபையாலும ஏனைய சைவமக்களாலும் உதவப்பெற்றபணம் ஷெ கோயில் திருப்பணிக் கும்பாபிஷேகச் சபைக்கு அனுப்பப்பெற்றது.

4 காங்கேசன் துறைக் காசநோயாளர் வைத்தியசாலையிலிருக்கும சைவச் சபைக்குப் பணவுதவி சபைபுரிந்துள்ளது.

**சைவப்பிரகாச அச்சகம் :**

1. புது அச்சுகள்(Types) வாங்கி அச்சகத்துக்குச் சேர்க்கப்பெற்றிருக்கின்றன.

2. அச்சகத்தின் கிளையாக புத்தகசாலையொன்று நடைபெற்று வருகின்றது.

3. சுயபாஷையில் கல்வி யூட்டப்பட்டு வருகின்றபடியால் பாடசாலை மேல்வகுப்புகளுக்குரிய பாட புத்தகங்களைத் தமிழில் வெளியிடுவதற்குச் சபை முயற்சித்துக்கொண்டு வருகின்றது.

4. இவ் வருடத்தில் திரு. பொ. கைலாசபதியவர்களால் எழுதிச் சபைக்கு உதவிய 3ம 4ம வகுப்புக்களுக்குரிய மாணவர் கதாவாசகம் சபைப் பிரசுரங்களாக வெளிவந்தன.

**சபைப் பத்திரிகைகள் :**

சபைப் பத்திரிகைகளால் சபைக்கு வரவேண்டிய நிலுவைப் பணம் வருடத்துக்கு வருடம் அதிகரித்துக்கொண்டே வருகின்றது. பணங் கொடுக்க வேண்டியவர்கள கூடிய விரைவில் கொடுப்பார்களென எதிர்பார்க்கின்றோம். சபைப் பத்திரிகைகளை வாரவெளியீடாக்கிய போதிலும் அவைகளினால் சபைக்கு நட்டமேற்படுவதுபற்றி சபை தீவிரமாய் ஆலோசிக்கவேண்டியிருக்கிறது. சைவ உலகம் இவ் விஷயத்தில் சபையோடு ஒத்துழையாதிருக்கும் வரை கட்டத்தை நிவிர்த்தியாக்க முடியாது.

**பொது :**

மரவரி யெடுப்பதுபற்றி மரவரிக் குழுவின் (Tree Tax Commission) சிபார்சுகளை அரசாங்கம் அமுலுக்குக் கொண்டுவருவதற்குரிய முயற்சிகளைச் சபை தொடர்ந்து செய்துவருகின்றது. பாஷைக் குழுவுக்கு (Language Commission ச்சபை பிரதிநிதிகளையனுப்பியுள்ளது. சபைத் தலைவரே சபையின் பிரதிநிதியாகக் கடமையாற்றினர்.

**அங்கத்தவர் மறைவு**

அனேகவருடங்கள் சைவத்துக்கும் சிறப்பாகச் சைவபரிபாலன சபைக்கும் சலியாத் தொண்டாற்றியவர்களும் சபையின் நிருவாகசபை அங்கத்தவர்களும் ஆகிய திரு. சித. மு. ப. சிதம்பரநாதச்செட்டியார் அவர்கள், வழக்கறிஞர் திரு. S. பதஞ்சலி அவர்கள், பண்டிதர் திரு. ம. வே. திருஞானசம்பந்தன் அவர்கள் இவ்வுலக வாழ்வை நீத்தனர். அவர்களின் சடுதி மறைவு எம்மைத் துயரக் கடலில் ஆழ்த்தியது. அன்னாரின் குடும்பத்தாருக்கு எமது அநுதாபம் உரித்தாகுக.

**ஆக்கவேலை:**

சபை ஆச்சிரம நாவலர் மண்டபத்தல் சபையாரால் நடத்தப்படும் சமய சேவைக்குச் சைவமக்கள் போதிய ஆதரவளியாமை வருந்தற்பாலது. சமயாசாரங்கள் மக்களிடையே குன்றிவரும் இக் காலத்தில் யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபை தனது கடமைகளைச் செவ்வனே செய்து வருகின்றது அவ்வக் கிராமங்களில் விசேட திருவிழாத்தினங்களில் சைவப் பிரசங்கங்கள் நிகழ்த்தவும் சமயசாஸ்திரங்களைப் போதிக்கவும் மனமுவந்து இப்பணிகளைச் செய்ய ஓய்வு நேரம் வாய்ந்த சைவப் பெரியார்கள் தேவைப்படுகின்றனர். சபை அங்கத்துவ சந்தாப்பணம் வருடமொன்றுக்கு மூன்று ரூபா மாத்திரமே. இப்பணத்தைக் கொடுத்து ஒவ்வொரு சைவ ஆடவரும் பெண்டிரும் அங்கத்தவராகச் சேர்ந்து சபைக்குப் புத்துயிரும் ஊக்கமும் கொடுக்குமாறு சைவ உலகைச் சபை கேட்டுக் கொள்ளுகின்றது.

ஆ. தனபாலசிங்கம்,
கௌரவகாரியதரிசி
2-10-55.

# தையலர்க்குரியது தையற் கலை

—:o:—

## பொருளாதாரமும் பிற நன்மையும் தரும்

கலைகள் பல திறப்பட்டவையாயினும் அவற்றுள் நுண்கலைகளே பெரும்பாலும் பெண்களை ஆட்கொள்ளுகின்றன. அந்நுண்கலைகளுள்ளும் தையல் தையலர்க்கு அத்தியாவசியம் இன்றியமையாத தென்பது யாவருக்கும் விளங்கும். இதையறிந்தே அரசாங்கத்தார் ஆரம்ப வகுப்பு முதற்கொண்டு அதாவது குழந்தைப் பராயம் தொட்டு மேல் வகுப்புவரை ஏனைய பாடங்களையும், தையலையும் பிரதான ஒரு பாடமாகப் பாடத் திட்டத்தில் வகுத்துள்ளனர்.

இப்பாடம் தையலார்க்கே போதிக்கப்படுவதால் அது அவர்களது வாழ்க்கையில் இன்றியமையாத ஒரு நுண்கலை என்பது கண்கூடு. எப்படி இக்கலை இன்றியமையாத தென்பதைச் சற்று ஆராய்வோம்.

ஒவ்வொரு பெண் குழந்தையும் என்றும் சிறுமியாக இருந்துவிடுகிறதில்லை காலகதியில் வளர்ந்து ஒவ்வொரு குடும்பப்பெண்ணுக — நல்லத் தலைவியாக —

**செல்வி சிவயோகம் அருளம்பலம்**

மனைக் கிழத்தியாக மாறுகிறாள் அப்போதுதான் அவளுக்கும் தையற் கலையின் மாண்பு புலனாகின்றது. தனது ஓய்வு நேரத்தைப் பிரயோசனப்படுத்தவும், தனக்கும் தன் குடும்பத்தவருக்கும் தேவையான உடுப்புகளைத் தைக்கவும், வீட்டை அலங்கரிக்கவும் ஓரளவிற்கு தையல் தெரிந்திருத்தல் வேண்டும். ஏன் தற்காலத்தில் தான் எத்தனையோ தையற்காரர்கள் இருக்கிறார்களே! எங்களிலும் பார்க்க அலங்காரமான முறையில் தைக்க அவர்களால் முடியும். துணியை வாங்கிக் கொடுத்துத் தைப்பதற்குரிய செலவையும் கொடுத்தால் உடுப்புகள் வீடு வந்து சேரும். இதற்கு நாம் ஏன் கஷ்டப்பட்டுப் பழக வேண்டும் என்று கேட்கும் அரிவையர்களும் உளர். ஆம் பணம் இருந்தால் இயலாத தொன்றில்லை. பணமென்றால் பிணமும் வாய்திறக்கும். அப்படியிருக்கத் தையற்காரன் ஏன் தைத்துக் கொடுக்கமாட்டான். அன்றியும் அவனுக்குப் பிழைப்பு வேண்டுமே. ஆனாலும் நாம் செய்தது என்று நாம் அணியும்போதும், நமது குடும்பத்திலுள்ளவர்கள் அணியும்போதும் எவ்வளவு பெருமைப்படுகிறோம். எவ்வளவு காசு கொடுத்தும் அலங்காரமாகத் தைக்கவில்லையே என்ற வேதனை [illegible] அத்தியாவசியகம் வேண்டப்படுவதாகிய சிக்கனம் நம்மை விட்டு அதிதூரத்திற்குப் போய் விடுகின்றது. சில சமயங்களில் வருவாய்க்கு மிஞ்சின செலவும் ஏற்பட்டுப் பெருங் கஷ்டங்களும் நேர்கின்றன. எல்லோரும தையற்காரனிடம் கொடுத்துச் செய்விக்கக்கூடிய வருவாயுடையவர்களா? இல்லை. இன்று எத்தனை குடும்பங்கள் தினசரி உண்ண உணவுக்கே திண்டாடுகின்றனர். இந்நிலையில் அவர்களுக்கு உடுப்புத் தைக்கப் பணம கிடைக்குமா? தங்களுக்குத் தேவையானவற்றைத் தாமே தைத்துக் கொள்வதில் பெருமை யில்லையா? இதற்குத்தான் சிறு வயதிலிருந்தே கலைகளிற் சிறந்ததாகிய தையற் கலையைத் தையலர் உதாசீனம் செய்யாது போற்றிக் கவனத்துடன் நன்கு பயின்று வருதல் வேண்டும். யாதாயினும் ஒரு தொழில் செய்து வரும நங்கையர் தவிர்ந்த ஏனைய மங்கையர்க்குத் தினசரி போதியளவு நேரங் கிடைக்கும். அந்த ஓய்வு நேரத்தில் வீண் கதைகள் பேசுவதிலும் வீண் சண்டை போடுவதிலும், சோம்பேறிகளாய்க் காலங் கழிப்பதிலும் எவ்வித பயனுமில்லை. ஏன் ஓய்வு நேரத்தைப் போக்கதான் எத்தனை சாதனங்கள் உண்டு. கதைப் புத்தகங்கள், சித்திரை, விளையாட்டு என்பன ஓய்வு நேரத்தைப் போக்க உதவுவனவே என்று பலர் நினைக்கலாம். உண்மைதான். இவையும் நமது வாழ்வில் இடம்பெற வேண்டியவைதான். ஒரு பெண்ணின் தினுந்தக் கடமைகள் அட்டவணைப்படுத்தப்பட்டிருக்கவேண்டும். அதில் நித்திரைவிட்டெழுவதிலிருந்து, இரவு படுக்கைக்குப் போகும் வரையுள்ள வேலைகளுக்குநேரம் குறிப்பிடப்பட்டிருக்கும். மத்தியானச் சாப்பாட்டின் பின்பும், இரவுச் சாப்பாட்டின் பின்பும் சிறிது ஓய்வு நேரம் குறிக்கப்பட்டிருக்கும். அதில் இரவிலுள்ள ஓய்வு நேரத்தில வாசித்தலும பகலிலுள்ள ஓய்வுநேரத்தில் விளையாட்டு தையல வேலை என்பனவும் இடம் பெறவேண்டும். சாதாரண பெண்ணொருத்தியிலும் குடும்பப் பெண்ணொருத்திக்கே தையல் மிகமிக வேண்டியதாக இருக்கின்றது. சாதாரணமாக வீட்டை அலங்கரிப்பதற்குத் தையல் வேலை தெரிந்திருத்தல் அவசியம். "தன் கையே தனக்குதவி" பிறர் கையை எதிர்பார்க்க முடியாது. தன்னாற் செய்யப்பட்ட துணிமணிகளைக் கொண்டு அலங்கரித்திருப்பதைக் காணுந்தோறும் உண்டாகும் மகிழ்ச்சி செய்து பார்த்து அனுபவத்தில் பெற்றவர்களுக்கே தெரியும். தையற் கலையில் தேர்ந்தவர்களாக நாம் இருப்பதற்கு அதில் ஆர்வமுள்ளவர்களாக இருக்க வேண்டும். கவர்ச்சியுண்டேல் உணர்ச்சியுண்டு என்பார்கள். அது எவ்வளவு உண்மை. நல்லனவோ கெட்டனவோ எதில் நமது நாட்டம் — மனம் அதிகம் செல்லுகின்றதோ அது நமது வாழ்க்கையில் இடம் பெறுகின்றது. தற்காலத்தில் பெரும்பாலான ஆண்களே, தையற்கலையிற் சிறந்தவர்களாக இருப்பதைக் காணுகின்றோம். ஏன் தையற்காரர்கள் அத்தனை பேரும் யார்? மென்மைக் குணம் படைத்த பெண்களுக்கே உரிய நுண்ணிய கலையில் ஆண்கள் இவ்வளவு பயிற்சி பெற்றிருப்பதைக் கண்கூடாகக் கண்டும், "எனக்குத் தையல் வராது", "நான் தைப்பதில்லை என்று கூறும் தையலரைக் கண்டு நாம் தலைகுனிய வேண்டாமா? இப்படிக்கூறுவதினால் எல்லாம் நாங்களே செய்து முடிக்க வேண்டுமென்பதில்லை. எனினும் ஒவ்வொரு நங்கையும் தையற்கலையில் கவர்ச்சியும், ஆர்வமும் உடையவராய்ச் சிறுபராயந்தொட்டே அதனைப் பயின்று வருதல் உத்தமம். எவ்வளவு பணம் படைத்தவர்களானாலும் சரி, தையலர் அனைவரும் தையற்கலையில் தேர்ந்தவர்களாக இருப்பது சாலச் சிறந்தது. அதனால் தமக்கும் பிறருக்கும் சிறப்பொடு செல்வமும சேருமேயன்றி எவ்வித நட்டமும ஏற்படாது. தையல இயந்திரம் கண்டு பிடிக்கப்படுமுன் முற்காலத்தில் வாழ்ந்த பெண்கள் கையாலேயே தமக்கு வேண்டியவற்றைத் தைத்துக்கொண்டார்கள். பெரிய குடும்பத்துப் பெண்கள்கூட, அழகிய சித்திர வேலைப்பாடுகளு

(தொடர்ச்சி 4-ம் கலம்)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# இந்துசாதன வளர்ச்சி

---0---

## சைவத் தமிழ் மக்கள் கடமை

---0---

யாழ்ப்பாணத்தில் சைவ மதம் குன்றிக் கிறீஸ்த மதம் தலையெடுத்த காலத்தில் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் பெருமானின் நினைவாக அவரது சீடர்களால் யாழ் நகர் வண்ணை யம்பதியில் "கிறீஸ்து மத கண்டன சபை" என்ற பெயரையுடைய ஒரு சபை தாபிக்கப்பட்டது. அச் சபையிலிருந்தே சில காலம் சைவத்தை வளர்த்து வந்தனர். அக்காலம் இச் சபைக்குச்சார்பாக "சைவ உதய பாநு" என்ற பத்திரிகையையும் நிறுவி அதன் மூலம் சமயவிடயங்களை எழுதி வெளியிட்டார்கள். இப் பத்திரிகைக்குப் பத்திராதிபராக அமர்ந்து கடமையாற்றிய பெரியார் திரு. சரவணமுத்துப் புலவரவர்களாவர். புலவர் அவர்கள் இப்பத்திரிகையை மிகச் சிறந்த முறையில் நடத்தி அரிய பெரிய விடயங்களை எழுதி வெளியிட்டு வந்தார்கள். இப் பத்திரிகையும் மேற் கூறிய சபையுமே நமது இலங்கையில் சைவத்தமிழர்களால் முதல்முதற் தாபிக்கப்பட்ட தாபனமும், பத்திரிகையுமாகும். இதை இன்றைய ஒவ்வொரு சைவத் தமிழனும் உணர்தல்வேண்டும.

கிறீஸ்து மத கண்டன சபை சிலகாலம் கடமையாற்றிய பின்னல் பெரியோர்கள் அச்சபையை மாற்றிச் சைவபரிபாலன சபை என அமைத்தார்கள். பின் உதயபாநுப் பத்திரிகை புலவர் அவர்களோடு நின்றுவிட அப்பத்திரிகையே பின் உருமாறி இந்துசாதனமாகப் பிரகாசித்தது. இந்துசாதனப் பத்திரிகைக்கு ஸ்ரீலஸ்ரீ நாவலர் மாணவரும் அவரது தமயனார் புதல்வருமாகிய பெரியார் திரு. த. கைலாசபிள்ளையவர்கள் கௌரவ பத்திராதிபராகக் கடமையாற்றி வந்தார்கள். இவருக்குப் பின்னல் ம. க. வேற்பிள்ளைப் புலவரின் புதல்வரான திருஞானசம்பந்தப்பிள்ளை பலவருடங்களாகப் பத்திராதிபராகக் கடமையாற்றினர். இப்போது சைவ பெரியார் ஸ்ரீ சி. சிவபாதசுந்தரனர் அவர்களின் நன்மாணவருள் ஒருவரான திரு. நம. சிவப்பிரகாசப்பிள்ளையவர்கள் புதியபத்திராதிபராகக் கடமை பூண்டு நற்றொண்டாற்றி வருகின்றனர் ஆகவே இந்துசாதனப் பத்திரிகைக்கு வழி வழ வரன்முறையான ஆசிரியர்கள் பத்திராதிபராக அமைவதும் யாழ்ப்பாணச் சைவமக்களின் தவப்பேறாகும்.

இப் பத்திரிகை நாவலர் பெருமானின் திட்ப நுட்பமான கருத்துக்களைக் கொண்ட கொள்கையை யுடையது. எப்படி திருவாவடுதுறையாதீனம் இன்றும் தன் மரபு நெறி மாறுமல் என்றும் ஒரேமாதிரி மிளிர்கிறதோ - அதுபோல சைவபரிபாலன சபையும் - பத்திரிகையும் நாவலர் இலட்சியத்துக்கு அமைந்து விளங்குகின்றன. இந்து சாதனத்தில் தமிழ் இலக்கியம் - சைவ சித்தாந்தம் -

தென்மயிலை
திரு. செ. கோவிந்தசாமி

அரசியல் - சமூகம் முதலான கட்டுரைகளும் சைவப்பெருமக்களின் திருச்சரித்திரங்களும் வெளியிடப்படுகின்றன. சைவத் தமிழ் மடந்தை செங்கையில் வைத்து மகிழ்வதும் - சைவத்தலைவி தனது மடிமீது வைத்து முத்தமிடுவதுமாகிய இவ் விந்துசாதனம் தமிழ்நாடெங்கணும் சென்றுலாவித் தம்மை முன்னுன் பேணி வளர்த்தபெருமக்களையும் கண்டு சைவச் சிறப்புப்பற்றி நினைவூட்டி வருகின்றது.

இக் காலத்தில் ஆபாசக் கருத்துக்களை யுடையனவும் சிற்றின்பக் கதைகள் அடங்கியனவுமாகிய பல பத்திரிகைகள் மாரிக்காலத்துப் புற்றீசல்போல வியாபார நோக்கமாய் வெளிவருகின்றன. தமிழின் பெருமை தெரியாத மாணவர்கள் பலர் அப்பத்திரிகைப்படிப்பிலேயே காலத்தைக்கழிக்கின்றனர்.

தற்காலம் ஒவ்வொரு சைவ இல்லத்திலும் இந்துசாதனம் இருத்தல்வேண்டும். இப்பத்திரிகை முன்போல வாரம் இருமுறை வெளிவரவோ அல்லது கிழமைக்கொருமுறைவரும் இதனைப் பெருப்பித்து வெளியிடவோ சைவமக்கள் ஆவனசெய்ய வேண்டும். இதனைப்பற்றி ஒவ்வொரு சைவத் தமிழ்க் குடும்பமும் சிந்திக்கவேண்டும். சைவாசிரியர்களும் - சைவமாணவர்களும் - சைவச் சபைகளும் இதனைப் பெருப்பித்து நடாத்தப் பல முயற்சிகள் எடுக்க வேண்டும். எங்கள் நாட்டுச் சைவப்பத்திரிகையைப் பாதுகாப்பது எங்கள் கடமையாகும். ஆதலால் சைவத் தமிழர்கள் எல்லோரும் இந்துசாதனத்திற்குப் பணிசெய்து அதை மென்மேலும் வளர்ப்பார்களாக

# தையலர்க்குரியது தையற் கலை

3-ம் பக்கத்தொடர்ச்சி

டன் கூடிய அலங்கார வேலைகள் செய்து தம்மையும், தமது குடும்பத்தையும் அலங்கரித்தார்கள் என்று படமூலமாகவும் கதைகள் மூலமாகவும் அறிகின்றோம். இன்னும் பொருளாதார விருத்திக்கும் தையற் கலை ஒரு சாதனமாக இருக்கின்றது. இதனை நாம் உதாசீனம் செய்து விடுவது எவ்வளவு மதியீனம். தையல் வேலைகள் செய்யாவிட்டாலும், பெரும்பாலும் பெண்கள் என்று பிறந்தவர்கள் யாவரும் இக்கலையினைக் கற்றுத் திறமையுடையோரா யிருத்தல் அவசியம். தையற் கலைக்கு உரியவர்களாயினற்போலும் தையலர் என்ற பெயர் வந்தது. பெரும்பாலும் சோம்பேறிகளை ஊக்குவிக்கும் கருவியாகவும் இது அமைந்துள்ளது. பொறுமையும் — அடக்கமும் — மென்மையும் — இரசிக்கும் தன்மையும் — அழகான கற்பனைகளும் நிறைந்தவள் பெண். இவையனைத்தும் தையலுக்கு வேண்டப்படுவன எனவே பெண்கள் இதனை அறிந்திருத்தல் அத்தியாவசியம். இப்பொழுது தையல் இயந்திரம நமக்கு ஒரு துணையாக இருக்கின்றது. இவ்வியந்திரம்தையல் வேலையுடன் பூவேலை அலங்காரமான வேறு வேலைகள் செய்ய உதவுகின்றது. இதனுல் பெரும்பாலானவர்கள் இதன் துணைக்கொண்டு தமக்குத் தேவையானவற்றைச் செய்துகொள்ளுகின்றனர். இவர்கள் இவ்விதம் தையலிற் சிறந்தவர்களாகவிளங்குவதற்கு அன்னையும், ஆசிரியையும் உதவியாளராக இருக்க வேண்டும். அவர்கள் ஊக்கமுள்ளவர்களாக இருந்து இக்கலையைப் பயிற்றுவதில் ஆர்வமுடையவராய் இருப்பின் தையற் கலையின் வளர்ச்சி பற்றிக் கூறவும் வேண்டுமோ? தையலர்களே இதன் பெருமை விளங்கா விட்டால் வேறு யார்தான் இக்கலையை ஆதரிக்க முடியும். கிராமங்களில் வதியும் மக்களின் முன்னேற்றத்திற்காக அமைக்கப்பட்டிருக்கும் சங்கங்களிற் பெரும்பாலானவை தையல் வகுப்புகள் வைத்து நடத்துவது பெரிதும் மகிழ்ச்சி தரக்கூடியது. இதற்கு அரசாங்கம் உதவி செய்வதும் பெரும் நன்மையாகும். பெண் குழந்தைகள் எல்லாம் படித்துப் பட்டம் பெறும் பாவையர்களாக இருக்கமுடியாது. அவர்களில் எத்தனைபேர் படிப்புக்கு ஓரளவில் முற்றுப் புள்ளி வைத்துவிட்டு, வீட்டோடு இருப்பார்கள். அவர்களுககு இக் கலை பொழுதுபோக்காக — வருவாய் தரக்கூடியதாக இருப்பதால் இதனைப் பயிலுதல் நலலது என்று கூறவேண்டியதில்லை. நுண்ணிய கலைகள் யாவற்றினும் தையலர்க்குப் பொருத்தமானது தையற்கலை என்பதை நாம் என்றும் மறந்து விடக் கூடாது.

# தேய்ந்து செல்கின்றது சிவநெறி

## இது உலகப் பொது நெறியாய் விளங்க வேண்டும்

### புங்குடுதீவில் குன்றக்குடி அடிகளார் தந்த புத்திமதி

புங்குடுதீவில் நடந்த பொதுக்கூட்ட வரவேற்பில் குன்றக்குடி அடிகளார் பேசும்போது "தமிழகத்தின் தொன்னெறி, சைவப் பெருநெறி, ஈழம் தொட்டு இந்தோனீசியா வரை பரந்து விரிந்து விளங்கிய பண்பு பெற்ற சிவநெறி காலப் போக்கில் வரவரத் தேய்ந்துகொண்டு வருகின்றமை கண்டு என் போன்ற சைவ இளம் உள்ளம் படைத்த இளைஞர்களின் மனம் வேதனையால் குமுறுகின்றது".

"தமிழகத்தின் தொன்னெறி சைவப் பெருநெறி, இன்று காலப் போக்கில் தேய்ந்துகொண்டு வருகின்றது. இந்த நிலையில் எப்படி மேன்மைகொள் சைவ நீதி உலகமெல்லாம் விளங்க முடியும்? தென்னுட்டுச் சிவநெறி, உலகப் பொது நெறியாக விளங்க வேண்டும். செந்தமிழ் சிவநெறி சிக்காக் [illegible] வரை விளங்க வேண்டும் என்பதே என் அவாவாகும். நால்வர் பெருமக்கள் காட்டிய வழியில் நம் சமுதாயம் சென்று கொண்டிருக்குமானல் எதிர்காலத் தமிழகம் ஏற்றமுடையதாகத் திகழுமென்பதில் எவ்வித ஐயமுமில்லை. நால்வர் பெருமக்களின் சரித்தி[illegible] காணவேண்டும்.

பரந்து விரிந்த சைவப் பெருநெறியைச் சம்பிரதாயம் என்ற கோட்டைக்குள் அடைக்கவேண்டாமெனக் கூற ஆசைப்படுகின்றேன். சிந்தனைச் செல்வங்கள் நிறைந்த சைவத்தின் மீது இன்று சில மாசுகள் படிந்து கிடக்கின்றதென்பதையும் சுட்டிக் காட்ட விரும்புகின்றேன். செப்பிடு வித்தைகள் காட்டி, சாதிவெறியினையூட்டிச் சைவத்தைப் பாதுகாக்கின்றோம் என்று கூக்குரலிடுவதனுல் சைவம் வளர்ச்சியடைய மாட்டாது. இவ்விதம் அமைக்கப்படும மதம் மணல்மீது கட்டப்பட்ட கோட்டையாகவே முடியும். இவற்றையறவே நீக்கிவிட்டு ஒன்றே குலம் ஒருவனே தேவன் என்ற உயர்ந்த கொள்கையின் வழி நாம் ஒழுக முன்வர வேண்டும். இன்றுலகில் நிலவும் அத்தனை நெருக்கடிகளுக்கும் — நோய்களுக்கும தக்கமருந்து சைவ நெறியேயாகும். அத்தகைய நமது கலாச்சாரத்தை நாம் கைநழுவ விடக கூடாது என்று கூறினர்.

## இந்திய பாகிஸ்தான் நட்பு

இந்தியாவுடன் நட்புரிமை நிலவுவதைப் பாகிஸ்தான் விரும்புகிறதென்றும் இரு முதல் மந்திரிகள் சந்திப்பில இதற்கு வேண்டியவாறு காஷ்மீர் சம்பந்தமாக முயற்சிசெய்யப் படுமென்றும் அந்தமுயற்சிநன்மைதராவிட்டால்காஷ்மீர்ப் பிணக்குப்பற்றிஐ.நா.சபைக்கு அறிவிக்கபபடுமென்றும பாகிஸ்தான் தேசாதிபதிதளபதி இஸ்கந்தர் மிர்சா தமது வானெலிப் பேச்சொன்றில் குறிப்பிட்டாராம்.

## கிழக்குப் பாஞ்சாலத்தில் வெள்ளச் சேதம்

கிழக்குப் பாஞ்சாலத்தில் மிகப் பெரும் வெள்ளப் பெருக் குண்டாகிப் பல்லாயிரக்கணக்கான மக்களை இழுத்துக்கொண்டு போயும் பல்லாயிரக்கணக்கான வீடுகளையும் அழித்து அளவிலாத சேதம் உண்டாக்கியிருக்கின்றதாம். பண்டித நேரு அவர்கள் நிலைமையைப் பார்வையிடுகின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அரசியல் அலை

1-ம பக்கத்தொடர்ச்சி

பிரயத்தனங்கள் செய்யப்பட்டன. மானம் என்பது எள்ளளவும் இல்லாத மனிதருக்கு நாடு எக்கேடுகெட்டால் என்ன சமூகம் எப்பாடுபட்டாலென்ன?

ஈழத்துக் கிழக்குப் பிரதேசத்தில் உள்ளவர்கள் யாவரும் தமிழ் பேசும் மக்கள். அம் மொழியை அமுதெனப் போற்றும் பண்புடையவர்கள். தாய் மொழிப் பற்றும் மானபிமானமும் தகைமையும் உள்ளவர்கள். தொன்று தொட்டுத் தூய பரோபகார குணம் படைத்த சிலர்கள். இத்தகைய நன்மக்கள் கனவிலும் மறந்து தம் மொழியைக் கை விடுவதற்கு எண்ணமாட்டார்கள் என்று எடுத்துக் காட்டவும் வேண்டுங்கொல். இந்தப் பகுதியிலே மொழித் துரோக முயற்சியைத் தொடக்கிவிட்ட முன் வந்தவர்கள் முன்பின் யோசியாது மூடத்தனமாக நடந்து கட்டுக்கதை கட்டுக்கதையாகவேயிருக்க உதவி புரிந்தமையே விந்தை!

## நவராத்திரி உபந்நியாச
# அறிவிப்பு

கோயில் அதிகாரிகட்கு

யாழ்ப்பாண நாட்டின் பல பகுதிகளிலும் உள்ள சைவாலயங்கள் எங்கும் சாரத நவராத்திரி பூசை விசேஷமாக நடைபெற்று வருகிறதெனினும் உற்சவம் நடைபெறும் அம்பாள் கோயில்கள் ஏறக்குறைய 35க்கு மேலுண்டு. இவ்வாலயங்களிலெல்லாம் நவராத்திரி சம்பந்தமான சொற்பொழிவுகள் நடைபெற வேண்டியது அத்தியாவசியமாகும். இலங்கைச் சைவசமயக் குருக்கள்மார்சபையினர் இவ்விடங்கட்குச் சென்று சமயப்பிரசாரம் செய்யத் தீர்மானித்திருக்கிறார்கள். இவர்களால் நியமனம் செய்யப்பெற்ற கீழ்க்காணும் உபந்நியாசகர்களைக் கோயிலதிகாரிகளும் குருக்கள்மார்களும் சமய அறிவு விருத்தியின் பொருட்டுக் கோயில்களுக்கு வரவழைத்து உபந்நியாசங்களை செய்விக்கும் வண்ணமும் தாங்கள் ஆசாரிய சம்பாவனை பிரயாணச் செலவுகள் உதவியும் ஆதரவு செய்யும்படி அவர்களைக் கேட்டுக் கொள்ளுகிறோம்.

உபந்நியாசகர்களின் பெயர்கள்

சிவஸ்ரீ து பாலசுந்தரக் குருக்கள் B A, மாவை, சிவஸ்ரீ சோ. சுப்பிரமணியக் குருக்கள் கோப்பாய் சிவஸ்ரீ சதுமாரசாமிக் குருக்கள் நல்லூர், சிவஸ்ரீ ஐ முத்துஸ்வாமிக்குருக்கள் உடுவில் ஸ்ரீலஸ்ரீ சபாபதி தேசிகர் அவர்கள் காரணவாய்

வரவழைக்க விரும்புவோர் மேற்படி சபைக்காரியஸ்தர்கள் விலாசத்திற்கு முன்னுடி அறிவிக்கவேணடும் என்று குருக்கள்மார் சங்கக்காரியதரிசிகள் கேட்டுக்கொள்ளுகின்றனர்.

இங்ஙனம்
காரியதரிசிகள்.
சோ. சுப்பிரமணியக் குருக்கள்
கோப்பாய் வடக்கு.
கோப்பாய்.

உதவிக் காரியதரிசி:
ஐ. முத்துஸ்வாமிக் குருக்கள்,
உடுவில்.

M, 151, 14-10-55.

## உள்நாட்டு வானொலித் தொலைபேசி

காலிக்கும் கொழும்புக் குமிடையில் வானொலித் தொலைபேசி (Telephone ஒழுங்கு வருகிற வருடம் அமைக்கப்படுமாம். அதன் முதல்வேலை கொழும்புக்கும் களுத்துறைக்குமிடையில் தொடக்கப்படும்.

# திருமணம்

வவுனியா தபால் நிலையத்தில் கடமையாற்றும் உதவி அதிகாரி திரு சு. தியாகராஜனுக்கும் புத்தளம் தபால் நிலைய உதவி அதிகாரி திரு. சு சபாரத்தினத்தின் சகோதரி செல்வி செல்வரத்தினத்திற்கும் 21—10—55 வெள்ளிக்கிழமை காலை 3 மணியளவில் வரும் சுபமுகூர்த்தத்தில் திருமணம் நடைபெறும். பந்துமித்திரர் யாவரும் சமுகமளித்து மணமக்களை ஆசீர்வதிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

| | | |
|---|---|---|
| சு. தியாகராஜன் "ராஜ வாசா" பண்ணாகம் வடக்கு, பண்டத்தரிப்பு | M 148 14 | சு. சபாரத்தினம் பண்ணாகம் வடக்கு, பண்டத்தரிப்பு |

## கோர்ட்டு விற்பனவு விளம்பரம்

உரும்பராய் தம்பையா வயித்திலிங்கம் கைம்பெண் செல்லம்மா
வழக்காளி

இல, 11618

எதிராக

1 உரும்பராய் கிழக்கு அற்புதம் தாவீது
2. ஷை சின்னப்பு யோசேப்பு
எதிராளிகள்.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் 11618ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கேட்டுக்கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக்காணி 1955 ஆம் கார்த்திகை மீ 17 உ வியாழக்கிழமை பிற்பகல் 4 மணி தொடக்கம் அந்தக்காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

காணி விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் கிழக்குப்பகுதி, கோப்பாய்க் கோவிற்பற்று ஊரெழு இறை "கிளப்பை" 43½ பரப்பு ஆனால் அளவின்படி 45 பரப்பும் 13 குளியும், எல்லை கிழக்கு சுப்பர் சின்னப்புவுக்கும் மறுபேருக்குமுடைய வாதனங்கள், வடக்கும் மேற்கும் கந்தர் வேலுப்பிள்ளைக்குடைய வாதனம். தெற்கு ஒழுங்கை இதடங்கலும். இதில் சொரியலாய் 8 பரப்பு 30ம் அதைச்சேர்ந்தவைகளும்.

செ. இரத்தினசபாபதி
கொமிஷனர்.

4-10-55,

M. 149 14—10 (ரூ 200)

## கோர்ட்டு விற்பனவு விளம்பரம்

கோண்டாவில் 1. ஆறுமுகம் கந்தையாவும் பெண்
2. பாக்கியமும்
வழக்காளிகள்

இல 9159.

எதிராக

ஷையூர் சண்முகம் செல்லையா தனக்காகவும் காலஞ்சென்றுபோன தனதுபெண் அன்னத்துக்காகவும
எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் 9159ம் இலக்கவழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக்காணி 1955 ஆம் கார்த்திகை மீ 15 உ செவ்வாய்க்கிழமை பிற்பகல் 4 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

காணி விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் நல்லூர்க் கோவிற்பற்று கோண்டாவில இறை பந்துலோப்பை நிபரப்பு 20½ யும் கிணறும் எல்லை கிழக்கு இராமுப்பிள்ளை பெண் சின்னாச்சிப்பிள்ளைக்கும் பங்காளருக்குமுடையவாதனங்கள் வடக்கு சாமி சின்னத்தம்பிக்கும் பங்காளருக்குமுடைய வாதனங்கள் மேற்கு ஆறுமுகம் அம்பலவாணருக்கும் அருளம்பலம் பெண் இராசம்மாவுக்கும் மறுபேருக்குமுடைய வாதனங்கள். தெற்கு ஒழுங்கை இதடங்கலும் இதிற் சொரியலாய் ¼ பங்கு

செ. இரத்தினசபாபதி
கொமமிஷனர்

6-10-55

M. 150 14—10 (ரூ 200)

## பாடசாலைகளுக்கு உதவிப்பணம்

ஒவ்வொரு சமய ஆதரவில் நடக்கும் பள்ளிக்கூடங்களில் படிக்கும் பிள்ளைகளின் பேரால் அரசாங்கம் உதவிப்பணம் கொடுப்பதற்கு கல்விப்பகுதிச் சட்டத்தில் பிள்ளைகளின் சமயம் பற்றிக் குறிப்பிட்டிருக்கும் பகுதியை வித்தியாதரிசிகள கவனிக்குமாறு அறிவிக்கப்பட்டிருக்கின்றனராம்.

அப்பகுதியின்படி 1947ம் ஆண்டு ஆடி (ஜூலாய்) முதலாம் திகதிக்குப் பின் பதிவு செய்யப்பட்ட பள்ளிக்கூடங்களில் படிக்கும் மாணவரின் பேரில் உதவிப்பணம் கொடுப்பதற்குப் பின்வருவன கவனிக்க வேண்டும்

பிறசமயப்பள்ளிக்கூடத்திற் படிக்கும் பிள்ளையினுடைய பெற்றோர் அனுட்டிக்கும் சமயப் பள்ளிக்கூடம்

1 இரண்டுமைல் தூரத்துக்குள் இருந்தால் எட்டு வயதுக்கு மேற்பட்ட ஒரு பிள்ளையின் பேரால் உதவிப்பணம் கொடுபடாது.

2 ஒருமைல் தூரத்துக்குள் இருந்தால் எட்டு வயதுக்குட்பட்ட பிள்ளையின் பேரால் உதவிப்பணம் கொடுபடாது.

## ஆசிரியர்களுக்குச் சமசம்பளம்

ஆசிரியர்களின் சம்பளம் பற்றி ஆராய நியமிக்கப் பெற்ற சபையார் ஆங்கில சுயமொழி ஆசிரியர்களுக்குச் சமசம்பளம் கொடுக்கும்படி கூறியிருக்கின்றார்களாம். வருங் காலத்தில் நியமிக்கப்படும் ஆசிரியர்களுக்கே இத்திட்டம் அமையும். இப்பொழுதுள்ளவர்கள் இத் திட்டத்தின்படி சம்பளம் பெற விரும்பினால் வித்தியாதிகாரியின் பரீட்சை ஒன்றில் அவர்கள் சித்திபெறுதல் வேண்டும்.

# உங்கள் நக்ஷத்திரம்?

எங்கள் சோதிடம்

ஸ்ரீ ராதாகிருஷ்ணன் கணிப்பது.

இருவாரப் பலன்கள், 16—10—55 —— 22—10—55

**மேடராசி அச்சுவினி, பரணி கார்த்திகை முதற்கால்.**

உம்முடைய கருமங்களில் இந்த வாரம் கூடிய திருத்தங்களுண்டாகும். கருமங்களை மிக இலகுவாக நீர் ஒழுங்கு பண்ணக்கூடியதாயிருக்கும். ஆனல் செவ்வாய் பிற்பகல் புதன் வியாழன் உமமைச் சிறிது நிலைகுலைக்கும். வார இறுதி சில அதிட்ட லாபங்களைத் தரும்.

**இடபராசி கார்த்திகை 2, 3, 4-ம் கால்கள் ரோகிணி, மிருகசீரிடம், 1, 2-ம் பாதம்.**

ஒரு தளப்பமான வாரம். முன் அரைப்பங்கு உம்முடைய உத்தியோக முயற்சிகளுக்கு ஒருவாறு நல்லாயிருக்கும். பின் அரைப்பங்கு சில இடையூறுகளைக் கொண்டு வரும். கடைசி இரு நாட்களும் சில இடைஞ்சல்களைத் தரும்

**மிதுனராசி மிருகசீரிடம், 3,4 திருவாதிரை, புனர்பூசம 1,2,3**

முன் அரைவாரம் தொந்தரவானதாயிருக்கும். உமக்கு மனச் சமாதானமிருக்க மாட்டாது நண்பர் உம்மை அதிகம் வருத்துவர். பின் அரைவாரம் மிக நல்லாயிருக்கும். பண நிலைகள் திருந்தும் உம்முடைய நண்பர்கள் இனத்தவர்களிடம் நீர் அதிக நன்மையைப் பெறுவீர்.

**கடகராசி புனர்பூசம் 4ம்பாதம் பூசம் ஆயிலியம்.**

பணத்துறையில் நல்ல வாரம். ஆனல் வேலையும் பொறுப்புகளும் கூடுதலாயிருக்கும். உமக்கு அமைதி இருக்க மாட்டாது. வார இறுதியில் இனத்தவர்களுடன் சண்டைகளுக்கிடமுண்டு.

**சிங்கராசி மகம், பூரம், உத்திரம, 1ம் பாதம்.**

வியாபாரத்துக்கு நல்ல வாரம். இடைஞ்சல்களிலிருந்து நீங்க உம்முடைய நண்பர்களின் உதவியை நீர் நம்பியிருக்கலாம். ஆனல் மனச் சமாதானமிருக்கமாட்டாது. உமக்குக் கிட்டியவர்களாயும் அருமையானவர்களாயுமுள்ளவர்களுடத்திலிருந்து நீர் நீங்கவேண்டி வரக்கூடும.

**கன்னிராசி உத்திரம் 2,3,4ம் பாதம் அத்தம் சித்திரை 1, 2ம் பாதம.**

அதிகம் முயற்சியுள்ள ஒரு வாரம் உம்முடைய இடைஞ்சல்களுக்கு உம்முடைய சில இனத்தவர்கள் காரணராயிருப்பார்கள் சில கண்டனங்களை நீர் முன்னிட வேண்டி வரும் ஆனல நீர் வெற்றிபெறுதல் நிச்சயம.

**துலாமசித்திரை 3,4ம் பாதம். சுவாதி விசாகம் 1,2,3ம் பாதம**

இந்தவாரம் தேகசுகம் அதிகம் நல்லாயிருக்க மாட்டாது. நீர் கவனமாயிருக்கவேண்டும அல்லது அது இந்த மாசம்முழுதும நிலைத்து நிற்கும் ஆபத்தான நோயை உண்டாக்கக்கூடும். பணத் துறையில் நல்ல வாரம், பகைவாழிவுக்குமிடமுண்டு.

**விருட்சிகராசி விசாகம் 4-ம் பாதம் அநுஷம், கேட்டை.**

செலவதிகரிக்கும். வழக்கமான செலவுகளை நீர் சமாளிக்க முடியாமல் வரும் நண்பர் [illegible] யாயிருப்பர், வார இறுதியில் அவமானங்கள் உண்டாவது பற்றி எச்சரிக்கையாயிருக்கவும்,

**தனுராசி மூலம் பூராடம் உத்தராடம் 1 பாதம்**

ஒரு நல்ல வாரம், உம்முடைய தன்பங்களிற் பல இந்தளவில் நீக்கப்பட்டிருக்கும் உம்மோடு போட்டியிடுவோரை நீர் வெல்லக் கூடியதாயிருக்கும். வார இறுதிக்குமுன் குடும்பச் சூழலில் சில சந்தோஷமான புதினங்களுக் கிடமுண்டு.

**மகராசி உத்தராடம் 2,3,4ம் பாதம் திருவோணம் அவிட்டம் 1, 2ம் பாதம்.**

இரகசியப் பகைவரைப்பற்றி எச்சரிக்கையாயிருக்கவும், விசேட கருமங்களை ஒழுங்கு பண்ணுவதில் இந்தவாரம் முழுதும் நீர் வருத்தப்படுவீர். குடும்பக் குழப்பங்களுக்குமிடமுண்டு.

**கும்பராசி அவிட்டம் 3, 4 பாதம, சதயம், பூரட்டாதி 1, 2, 3 ம் பாதம்.**

ஒரு நல்ல வாரம், எல்லா எதிர்ப்புகளையும் நீர் வெல்லக்கூடியதாயிருக்கும். மனச்சமாதான முண்டாகும். உத்தியோக சித்தியும் புகழும் நிச்சயம்.

**மீனராசி பூரட்டாதி 4, உத்தரட்டாதி ரேவதி.**

இந்தவாரம் சுகவீனங்களுக் கிடமுண்டு நண்பர்களுடன் பிழை எண்ணங்களுக்கிடமுண்டு. ஆனல் [illegible] யம்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனத்தொடு வாய்மை மொழிந்த மன்னன் அரிச்சந்திரன்

1-ம் பக்கத்தொடர்ச்சி

எவ்வளவுதான் கடமைகளைச் செய்தபோதிலும அடிமைகொண்ட பிராமணனோ, பிராமணத்தியோ கொஞ்சமேனும் இரக்கமில்லாதவர்கள். அவர்களைக் குறிக்கும்போது ஆசுகவி மிக அழகாகக் குறிப்பிடுகிறார்.

"புன்கணுற்றரம்பை மாதர்
வருந்தவும் புந்திசெய்யா
வன்கணனிரக்க மில்லான்
மடித்தவாய் வெடித்த
சொல்லான்
தன்கணன் பில்லான் பொல்
லான்
தறுகணன் வில்லை கொண்
டான்வே
னின்கணில் லாதான் பாவி
இவனிலுங் கொடியபாவி"

பாரியாரைப்பற்றிக் கூறுமிடத்து "அவனிலுங் கொடிய பாவி" என்றார், 'சாடிக் கேற்ற மூடியல்லவா!' அப்பாவின் தாரம் நன்றாயிருக்கிறது. இக்கொடியவர்களுக்கிடையில் சந்திரமதி எவ்வாறு வாழ முடியும்? பாவம், போகட்டும். 'பாகற்காய் தாழ்க்க சுரைக்காய் முளைக்குமா?' தேவதாசனைப் பார்ப்போம்.

"அடியினு லஞ்சும்மைந்த
னனகதலைப் பய முணர்த்த
விடியுமுன்னெ மூந்திருந்து
விளைபுலங் களைபறித்துக்
கடிவனத் தடகு கொய்து
காட்டூம் சமிதையும்
பொன்
முடிபுனை தலையில் வைத்து
முறைமுறைவருயக் காளில்"

இவ்வாறாக ஒவ்வொரு நாளும் கடமையை உணர்ந்த தேவதாசன் வேலைகளைச் செய்து கொண்டுவந்தான். ஒரு "தருப்பை கண்டிது விட்டேகில் அந்தணன் மூள்வான்" என்று நினைத்து தருப்பைக்குப் பக்கத்தே செல்கின்றான், ஐயோ பாவம் குறித்து வந்து அதனுள்ளே தங்கும் கோளராத் தீண்டிற்று. அங்கே வேறு யார்தான் போனாலும் அப்பாம்பு கடித்திராது, தேவதாசனையே கடிக்க வேண்டுமென்னும் எண்ணத்துடன் குறித்து வந்திருந்த விசுவாமித்திரனாகிய பாம்பல்லவா அது. ஆகவே தேவதாசன் விடமேறப்பெற்று இறந்தான். கூடிச்சென்ற பாலர்கள் ஊருக்கு வருகிறார்கள். முன்னமே சந்திரமதிக்கு உற்பாதங்கள் நிகழுகின்றன. தன்னை அறியாமலே நிலை தளருகிறாள். மாலைக் காலமாயிற்று. திசையை நோக்கி வணங்குகின்றாள். பாலரைக்காண்கின்றாள், தன் மகனைக் காணாது சுழலுகின்றாள். வாய் சோர்ந்து இணங்கி உம்முடனே வந்த என் மகன் எங்கே? என்றாள். அம்மா பாம்பு கடித்திறந்தான் என்றார்கள். சொற் காதில் விழுமுன்னரே அறிவு அழிகின்றாள். இதனை ஆசிரியர் "உயிர்த்திலள் மறுகி வீழ்ந்தாள்" என்கின்றார். இதன்மேல் என்ன சொல்ல முடியும். அன்பர்களே இந்த இடத்தைப்பற்றிக் கொஞ்சம் சிந்தியுங்கள். பெற்றதாய். இறந்தமகன். ஒரே ஒருமகன். இறந்தஇடமோ நடுக்காடு. என்றாலும் தன் அடிமைத் தன்மையை தன் கடமையை உணருகிறாள். அது அவள் மனத்தைக் கட்டுகின்றது. அறிவு தெளிந்து பாலரை, இறந்த இடம் எதுவென்று கேட்கிறாள். பீரிட்டுக்கொண்டு வரும் அழுகையை அடக்கிக்கொண்டு வந்து பிராமணன் வீட்டுக் குற்றேவல்களை முடிக்கிறாள், பின்பு வாய் புதைத்து அழுது விம்மிக் கொண்டு அரனைத்தீண்டி என்மகன் இறந்தான் என்கிறாள். 'சேறற்குன்றன் திருவுளம் அறியேன்' என்கிறாள். இதைக்கொஞ்சம் யோசித்துப் பாருங்கள். மகன் இறந்தான் என்று கேள்விப்பட்டபின் குற்றேவல்களைச் செய்வார்களா....? உத்தரவு பெற முன்வருவார்களா? இது ஒரு உலகம் அப்பா அதுதான் சந்திரமதி உலகம். எட்டிப் பார்க்க ஆயலாது. பிராமணன் மறுக்கிறான். இரக்கமே உருவான சந்திரமதி

"அடிமையே எனினும் ஐயா
அந்த தகிறந்தா னென்றற்
கொடியனேன் றனசகுப் பெற்ற
வயிறுதான் கொதித்திடாதோ!
படியின்மே லிறந்தான தன்னைப்
பார்த்தெடுத் தடக்கிக் கங்குல்
விடியுமுன் வருவே னல்கு விடை
யெனத் தொழுது வீழ்ந்தாள்"

இளகாத கற்களையும் இளகச் செய்கிறது அவள் தோற்றம்— இல்லை — கவி பாட்டு— அதுவுமில்லை — விடியுமுன் வருவேன் என்ற அவள் கூற்று. ஒருவாறு பிராமணன் விடை கொடுக்கிறான். வெளிப்பட்டுச் செல்கின்றாள் சந்திரமதி. காலமோ இராக்காலம். அறுதையான சந்திரமதி செல்லுமிடமோ கொடிய விலங்குகள் வாழும் காடு. மகன்மேற் கொண்ட காதல் முற்பட்டுச் செல்கிறது. துருவித் தேடிச் செல்கிறாள். கழுதும் பேயும், நரிகளும், குறளும் சூழ்ந்திருப்ப நடுவே குமாரனைக் காணுகின்றாள். தூக்குகிறாள். மடிமேல் வைத்துக் கொண்டு அண்டரும் மறுகி யேங்க வாய்திறந்து அரற்றுகின்றாள். நமது தலைவர் மீட்க வருகாலத்து எங்கே? என ஆசை மகனை என்று கேட்டால் எதிரேது சொல்வன் மகனே என்கிறாள். கல்லோர் வகுத்த முறையாம் அறங்கள கெலட்டில் குறையோம் என்கிறாள். முமதரித்த துபிரான பாவி என்கிறாள். ஒக்கமுடியாமலிருத்தலினாலே அநியாயம் மிக்க யமன் என்கிறாள். இடை இடையே ஊசி குத்துகிறது. அடிமை கீழ்வு பிராமண பிராமணத்தி கிலே விடியுமுன் வருவேன் என்ற வாக்கு. அதனாலே, இறந்த மகனைத் தூக்கித் தோழிற் போடுகின்றாள். சந்திரமதி அக்காட்டிற்கு ஒரு நாளும் போனவளல்ல. காலமோ இராக்காலம். தோழிலோ பெரிய சுமை. அவ்வாறு மயானத்தை அடைய முடியுமா. மயானம் எங்கே? வழி காட்டுபவர் யார்? கெட்ட விலங்குகள் இவளைத் தீண்டாவா! கடமை, சத்தியவாழ்வு வழி காட்டுகிறது. பின்தொடருகிறாள், சமீபித்தாள் சுடலையை,

"பிணங்கள் சுடும் கடும்புகையர்
அரவத்தாலும்
பிளந்துதலை வெடித்திடு
பேரமலையாலும்,
நிணங்கருகிச் சுறுநாறு
முடைபினாலும்
நெடுநகனலின் கொழுந்தெரிந்த
சிவப்பினாலும்,
கணங்கள்மிகக் களித்தாடுந்
துழனியாலும்
கனற்பொறியின் மலிவாலும்
புகையினாலுஞ்,
சுணங்குபல பிணங்குதெருங்
குரைபபினாலும்
தோகை யறிந்துணர்ந்து
கொடும்சுடலை சார்ந்தாள்"

இவ்வாறான நிகழ்ச்சிகளால் சுடலையை அடைகிறாள். ●

* * * வளரும்.

காரைநகர் இந்துக் கல்லூரியில்

# பிரிவுபசாரக் கூட்டம்

காரைநகர் இந்துக் கல்லூரியில் கல்வி பயின்று அங்கு நாற்பது வருடகாலமாக ஆசிரியத் தொழிலாற்றித் தற்சமயம் இளைப்பாறி இருக்கும் திரு. ஆர். கந்தையா அவர்களைக் கௌரவிக்கும்நோக்கமாக காரைநகர் மக்களால் கடந்த 8-10-55 சனிக்கிழமை பிற்பகல் 4 மணியளவில் அவரை அவரது மனைவி மக்களுடன் இல்லத்திலிருந்து மலர்மாலையிட்டு மேளவாத்தியத்துடன் இக் கல்லூரிக்கு அழைத்துச் செல்லப்பட்டது.

நடராசா ஞாபகார்த்த மண்டபத்தில் திரு. ஏ. விகுலசிங்கம் ஜே பி. நியாயவாதி அவர்களின் தலைமையின்கீழ் திரு. கு செல்லையா அவர்களின் தேவார பாராயணத்துடன் கூட்டம் ஆரம்பமாயது. தலைவர் தமது தலைமையுரையில் தற்சமயம எங்கள் மத்தியிலும் எனறும் காரைநகர் மக்களின் மத்தியிலும் இளைப்பாறிய திரு. கந்தையா அவர்கள் ஓர் சாதுவான குண முடையவரென்றும், சைவசமய சீலரென்றும், தமது மாணவன் என்றும் குறிப்பிட்டுக் காட்டினர். அவர் தொடர்ந்து பேசியதாவது, இதுமட்டுமல்ல இக் கல்லூரி ஸ்தாபகரான திரு சயம்பு ஆசிரியரின் மாணவராகவும், அவர் இருக்கும் பொழுதே இவர் ஆசிரியத் தொழிலில் ஈடுபட்டுள்ளார் என்றும், நாங்கள் சயம்புச் சட்டம்பியாரையும், கந்தையா ஆசிரியரையும் மறக்க முடியாதென்றும் பேசினர்.

பின்னர் காரைநகர் இந்துக்கல்லூரி ஆசிரியர்களாலும் மாணவர்களாலும் ஆங்கிலத்தில் எழுதப்பட்ட பிரிவுபசாரப்பத்திரமொன்றும், காரைநகர் மக்களால் தமிழில் எழுதப்பட்டநன்றி பாராட்டுரை யொன்றும் வாசித்து அளித்தார்கள். பின்னர் அவருக்குப்பொன்னாடை போர்த்தி அவரது புகைப் படமும் திரைநீக்கஞ் செய்யப்பட்டது.

அடுத்தபடியாக யாழ்ப்பாண இந்துக்கல்லூரி அதிகாரசபைக் காரியதரிசியும் நியாயதுரந்தரருமாகிய திரு ஏ. அருளம்பலம், திரு. ஏ. எஸ். கந்தையா ஜே. பி., திரு. பி. நவரத்தினம் (ஆசிரியர் யாழ்ப்பாணக் கல்லூரி) திரு. என். பொன்னம்பலம், திரு. ஏ. தியாகராசா (இந்துக் கல்லூரி அதிபர்) திரு. ஏ. தம்பிப்பிள்ளை ஆகியோரும் புகழ்ந்து பேசினர்.

பின்னர் இளைப்பாறிய திரு. கந்தையா அவர்கள் தன்னை இவ்வளவாகக் கௌரவித்ததைக் குறித்து நன்றியறிவித்தனர். சொற்பொழிவாற்றினர். திரு. வி. சுப்பிரமணியம் அவர்களால் நன்றி கூறப்பட்டது. திரு. என். கனகசுந்தரம் அவர்களின் தேவாரபாராயணத்துடன் கூட்டம் இனிது கலைந்தது.

## பஞ்சாப்பில் பெருவெள்ளம்

இரவி நதியின் அணைக்கட்டுக் காத்திராப்பிரகாரமாக உடைந்து, நதிபெருக்கெடுத்து, பஞ்சாப்பின் தலைநகரமாகிய இலாகூரின் அரைப்பங்கு ஐந்தடி வெள்ளத்துக்குள்ளாகிப் பல்லாயிரக்கணக்கான மக்களுக்கும் பொருள்களுக்கும் அழிவுண்டாக்கி விட்டதாம்.

## சைவப் பிரசங்கம்

நிகழும் புரட்டாதி மீ 14ந் தேதி 30-9.55 வெள்ளிக்கிழமை இரவு 7 மணிவரையில் யாழ்ப்பாணம் நகர எல்லைக்குள் 'சாப்பல்' தெரிவிலுள்ள ஓவசியர் திரு. செல்லையா அவர்களின் இல்லத்தில் யாழ்ப்பாண நகரக் கூட்டுவழிபாட்டுச்சபையின் 73 வது கூட்டத்தில் சைவப்பிரசாரகர் திரு. பொன். அப்புக்குட்டியவர்கள் "கடவுள் வழிபாடு" என்னும் பொருளைபற்றிச் சிறந்த சைவப் பிரசங்கம் செய்தார்.


# யாழ்ப்பாணம் ஐக்கியலாபநிதி

1918-ம் ஆ ஸ்தாபிதமானது.

வங்கிக்காரர்மூலநிதி 8 லட்சம் ரூபா.

இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப் பணம் ரூபா

**616313,00**

100 ரூபா விகிதமான 8000 பங்குகள்

பங்குப்பணங்கட்டுமுறை.

மாசமொன்று 1ரூபா விகிதமாக 80 மாச காலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக்கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்.

தினசரிப்பற்றுவரவு.

எச்சமிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானால் ஒரு விகித வட்டியுடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்.

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப் பணம்.

க்ஷேமப்பணம் 3 மாசம், 6 மாசம், 9 மாசம், 12 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும் வட்டியும் முறையே 1 விகிதம், 2 விகிதம் 4 விகிதம் 6 விகிதமாகக் கொடுக்கப்படும்.

உண்டியல்கள்.

கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்க விதமாகக் கொடுக்கப்படும். தொடுவாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.

இந்தியசகோட்டு வட்டத்திற்கு மாற்றிக் கொடுக்கப்படும்.

கடன்.

நகைகள் ஈடு வைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். முதலையும் பாகம் பாகமாகக் கொடுக்கலாம்.

இன்னும் வேண்டிய விபரங்களை என்மூலமாக அறிந்துகொள்ளலாம்.

S. கனகசபை
சிறுப்பர்.

Std. 14 20-11-46—20-11-49.


வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள சைவநீதி விளங்குக உலகமெல்லாம்

Printed and Published by S P. Kandiah, F. I. S. A. (Lond.) residing at 245, Navalar Road Jaffna, for and on behalf of the Proprietors the Saiva Paripalana Sabhai, Jaffna, at their Press, the Saiva Prakasa Press, Vannarponnai, Jaffna on Friday October. 14 1955.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org